# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2023/51 - 2017 ජුනි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.06.15

*2023/51 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 1/2012* (II)

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்***

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ப) என்னும் பிரிவின் கீழ் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர,<br>
கடற்றொழில், நீர்வாழ் உயிரின,வளங்கள்<br>
அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி<br>
இராஜாங்க அமைச்சர்.

கொழும்பு,<br>
*2017, யூன் 14.*

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் மீன், மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. உள்ளூர் நுகர்விற்காக இறக்குமதி செய்யப்பட்ட மீன் இனங்கள் அல்லது மீன் உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக 1980 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்துடன் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளுக்கமைய உணவுக்காக, மனித நுகர்வுக்காக அல்லது உடன், குளிரூட்டப்பட்ட, அல்லது தகரத்தில் அடைக்கப்பட்ட அல்லது ஏதேனும் பதனிடப்பட்ட அல்லது உயிருடன் உள்ள வகையை மீன் இரைக்காகப் பயன்படுத்துவதற்கு எவையேனும் மீன் இனங்களை அல்லது மீன் உற்பத்திப் பொருளை ஏற்றுமதி செய்வதில், இறக்குமதி செய்வதில், ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள் இவ்வொழுங்கு விதிகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

3. மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி அல்லது மீள் ஏற்றுமதி ஆனவை சர்வதேச கட்டுப்பாடுகளுக்கிணங்க பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அத்துடன் (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைச் சட்டத்தினதும் அத்துடன் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.


1A - PG 3570 — 2757 (2017/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. ஏதேனும் மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருளின் ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர் அல்லது மீள் ஏற்றுமதியாளர் வனம்சார் தாவர விலங்கினத்தின் அருகிவரும் இனங்களின் சர்வதேச வியாபாரத்தின் மீதான சமவாயத்திற்கு (CITES) இணங்க விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

*பாகம் - I*

**ஏதேனும் மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருளின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி என்பவற்றைப் பதிவு செய்தல்**

5. ஏதேனும் மீன் மற்றும் உற்பத்திப் பொருளின் ஏற்றுமதியில், இறக்குமதியில் மற்றும் மீள் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள் அந்நோக்கத்திற்காக கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தில் பதிவுசெய்தல் வேண்டும்.

6. மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கான, இறக்குமதிக்கான மற்றும் மீள் ஏற்றுமதிக்கான தாபனம் தாபனம் ஒன்றைப் பதிவுசெய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனும் ஆள், முறையே அவரால் வழங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய பணிப்பாளர் தலைமையதிபதிக்கு இவ்வொழுங்குவிதிகளின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் 1, படிவம் 2, அல்லது படிவம் 3 இல் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

7. அதற்கான 2 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வருடாந்தப் பதிவுக்கட்டணம் ஏதேனும் தாபனத்தைப் பதிவுசெய்ததற்கான விண்ணப்பத்துடன் சேர்த்து விண்ணப்பதாரியினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

8. எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஏதேனும் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருளின் ஏற்றுமதி, இறக்குமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி பற்றிய வழிகாட்டு நெறிக்கிணங்க ஏற்புடையற்பாலதான இயைபான தாபனம் அல்லது கம்பனியில் களப் பரிசோதனை ஒன்றை நடாத்துதல் வேண்டும்.

*பாகம் - II*

**மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதிக்கான தேவைப்பாடுகள்**

9. இவ்வொழுங்குவிதிகள் செல்லுபடியாகும் ஏற்றுப்பொருட்பட்டியல் அல்லது வான்வழிப் பட்டியல் ஒன்றுடன் இலங்கையினுள் பிரவேசிக்கின்ற ஏதேனும் மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருளிற்கு ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

10. செல்லுடியாகும் ஏற்றுப்பொருட்பட்டியல் அல்லது வான்வழிப் பட்டியல் இன்றி இலங்கைக்குள் கொண்டு வரப்படும் அல்லது பண்டங்களை ஒரு கப்பலில் இருந்து இன்னொரு கப்பலுக்கு மாற்றுவதில் கொண்டுவரப்பட்ட ஏதேனும் மீன் அல்லது மீன்பிடி உற்பத்திப்பொருள் 2015 ஆம் ஆண்டின் மீன்பிடித் தொழில் ஒழுங்குவிதிகளுக்கு முரணாக இறக்குமதி செய்தல் அல்லது காவிச் செல்லுதலைத் தவிர்ப்பதற்கு, தடுப்பதற்கு மற்றும் நீக்குவதற்கென சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத துறைமுகநாட்டு வழிமுறைக்கு அமைந்ததாதல் வேண்டும்.

11. மீன் அல்லது மீன்பிடி உற்பத்திப்பொருட்களின் துறைமுகத்திலேயே கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றும் எவரேனும் ஆள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறு ஏற்றுப்பொருட் பட்டியல் ஒன்றை மற்றும் வேறு கண்டுபிடிக்கக்கூடிய ஆவணங்களை கொடுத்துதவுதல் வேண்டும்.

12. இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், ஆளெவரும் 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மீன் பதப்படுத்தும் தாபனத்தின் ஒழுங்கு விதிகளின்கீழ் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தில் தாபனம் ஆனது பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி அத்தகைய தாபனத்தில் மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் அல்லது மீள் ஏற்றுமதி செய்வதற்கு ஈடுபடுதல் ஆகாது.

13. ஏதேனும் மீன் அல்லது மீன்பிடி உற்பத்திப் பொருளினை ஏற்றுமதி செய்வதற்கு, இறக்குமதி செய்வதற்கு, மற்றும் மீள் ஏற்றுமதி செய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனும் ஆள் சர்வதேச வியாபாரப் பொருள் குறியீட்டு முறைமைக்கு இணங்குகின்ற ஏற்புடையற்பாலதான எச். எஸ் குறியீடுகளின்படி உற்பத்திப் பொருளின் இனங்கள், வகை மற்றும் வடிவத்தினை வெளிப்படுத்துதல் வேண்டும்.

14. ஆளெவரும் 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ்உயிரின வளங்கள் சட்டத்தின்கீழ் தடுக்கப்பட்ட ஏதேனும் மீன் அல்லது மீன் உற்பத்திப்பொருளை ஏற்றுமதி செய்தலோ இறக்குமதி செய்தலோ மற்றும் மீள் ஏற்றுமதி செய்தலோ ஆகாது.

15. ஆளெவரும் ஏதேனும் பிராந்திய கடற்றொழில் முகாமை ஒழுங்கமைப்பில் (பிகமுஓ) சட்டவிரோத, அறிக்கையிடப்படாத, அல்லது ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தொழிலிலிருந்து உருவாக்கப்பட்டதான வகுதிப்படுத்தப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருளை ஏற்றுமதி செய்தலோ, இறக்குமதி செய்தலோ மற்றும் மீள் ஏற்றுமதி செய்தலோ ஆகாது.

16. ஆளெவரும் ஏற்புடையற்பாலதாயின் சேர்த்தனுப்புகின்ற சான்றுப்படுத்தப்பட்ட நிகழ்வுத்தாளில் தெளிவாக கண்டுபிடிக்கமுடியாத மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்தலாகாது.

17. ஆளெவரும், ஏற்புடையற்பாலதானவிடத்து வலிதான மீன்பிடி சான்றிதழின்றி அல்லது 2014 ஆம் ஆண்டின் மீன்பிடி தரவு சேகரிப்பு ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் சட்டரீதியாக பிடித்தமீன் அல்லது அத்தகைய மீனிலிருந்து ஆக்கப்பட்ட மீன் உற்பத்திப்பொருள் என்க்கூறுகின்ற வலிதான ஆவணம் இன்றி ஏதேனும் மீன் அல்லது மீன் உற்பத்திப்பொருளை ஏற்றுமதி செய்தலோ இறக்குமதி செய்தலோ அல்லது மீள் ஏற்றுமதி செய்தலோ ஆகாது.

18. மீன் இனங்கள் எல்லாவற்றினதும் விபரங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்துகின்றதான இயைபான பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்கமைப்புகளின் புள்ளிவிபர ஆவண நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்படுதல் வேண்டும்.

19. பதினெட்டாம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட புள்ளிவிபர ஆவணம், மீன்பிடிக்கும் கலத்தினை கொடிக்குரிய அரசின் அதிகாரமளிக்கப்பட்ட அரசாங்க அலுவலரினால், அல்லது கலமானது வாடகைக்கு அமர்த்தல் ஒழுங்கேற்பாடுகளின்கீழ் செயற்படுமாயின், ஏற்றுமதி செய்யும் ஆளின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும்.

20. அத்தகைய புள்ளிவிபர ஆவணத்தின் மீள் ஏற்றுமதிச் சான்றிதழ் எழுத்தில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வலிதானதாக்கப்படல் வேண்டும்.

21. கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணிப்பாளர் தலையைதிபதி பேணிக்காக்கும் நோக்கத்துக்கென மூடுகைக் காலப்பகுதிகள், அளவுகளிற்கான வரையறைகள், எண்ணிக்கை, தொகைகள், வகைகள் மற்றும் வடிவங்கள் அத்துடன் ஏற்றுமதிக்கான அல்லது மீள்ஏற்றுமதிக்கான காலஎல்லை போன்ற முற்காப்பு முகாமைத்துவ வழிமுறைகளை விதிக்கலாம்.

**மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக அல்லது மீள் ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதித் தாபனங்களை அல்லது மீன் பதனிடும் தாபனங்களைப் பரிசோதித்தல்**

பாகம் - III

22. மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருளை பதனிடும் தாபனத்தின் இறக்குமதியாளர், சொந்தக்காரர் ஒவ்வொருவரும் முன் அறிவித்தல் இன்றி சொல்லப்பட்ட தாபனத்தில் அல்லது இறக்குமதி செய்யும் இடத்தில் பரிசோதிப்பதற்கும் மற்றும் மாதிரிகளை, தரவுகளை மற்றும் ஆவணங்களை சேகரிப்பதற்கும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அனுமதித்தல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு வசதியளிததலும் வேண்டும்.

23. பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அலுவலர் 22 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட பரிசோதனையினை ஏழுநாட்களினுள் சொல்லப்பட்ட ஒழுங்குவிதியின் நியதிகளின்படி நிறைவேற்றி விபரமான பரிசோதனை அறிக்கை ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

பாகம் - IV

**பதிவு மற்றும் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்துதல் அல்லது இரத்துச் செய்தல்**

24. எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய மீறுகையின் பாரதூரமான தன்மையினை கவனத்திற்கொண்டு ஆறுமாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பதிவை இடைநிறுத்தல் அல்லது இல்லாதாக்குதல் வேண்டும்.

25. விடயத்திற்கேற்ப சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு அல்லது வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைப் புதுப்பிப்பதற்கு மறுக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபொன்றிலான இன்னலுற்ற விண்ணப்பதாரி அல்லது எவரேனும் ஆள் அத்தகைய முடிபின் முப்பது நாட்களினுள் கடற்றொழில் நீர்வாழ்உயிரின் வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சின் அமைச்சரவை செயலாளருக்கு அத்தகைய முடிபிற்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

26. செயலாளர், அத்தகைய மேன்முறையீட்டைப் பெற்றுக்கொண்டதன் மேல், அவர் அவசியமானதென அல்லது தோதானதென கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்யலாம் என்பதுடன் அதன் பின்னர் -

(அ) மேன்முறையீட்டை அனுமதிக்கலாம் என்பதுடன் விடயத்திற்கேற்றவாறு சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு அல்லது வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைப் புதுப்பிப்பதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியை பணிக்கலாம் ; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கான அனுமதியை மறுக்கலாம் என்பதுடன் பணிப்பாளர் தலைமையதிபதியால் மேற்கொள்ளப்பட்ட முடிபை உறுதிப்படுத்தலாம்.

27. இவ்வொழுங்குவிதிகளில் -

"விமானச் சரக்கு" என்பது விமானத்தின் மூலம் சரக்கை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் அல்லது மீள் ஏற்றுமதி செய்தல் எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் எனப் பொருள்படும்.

"இரை" என்பது மீன் அல்லது வேறு விலங்குகளைக் கவர்வதற்கு மீன்பிடி உபகரணத்தில் இடப்படும் உணவு எனப்பொருள்படும்.

"மீன்பிடி சான்றிதழ்" என்பது படகொன்றினால் பிடிக்கப்படும் குறித்த மீன்வகையை எண்பிப்பதற்கு மீன்பிடிப் படகொன்றின் கொடிக்குரிய நாட்டின் அதிகாரத்தினால் வழங்கப்படும் ஒரு சான்றுப்பாடுத்துகை எனப் பொருள்படும்.

"சிஐரிஈஎஸ்" (CITES) என்பது வன தாவர விலங்கினத்தின் அருகிவரும் இனங்களின் சர்வதேச வியாபாரம் பற்றிய சமவாயத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் எனப் பொருள்படும்.

"மூடப்பட்ட காலம்" என்பது எந்த ஆண்டுகாலப் பகுதி குறித்த மீன் வகையினைப் பிடிப்பது அனுமதிக்கப்படாது இருக்கின்றது அந்த ஆண்டுக்காலப் பகுதி எனப் பொருள்படும்.

"பணிப்பாளர் தலைமையதிபதி " என்பது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் உயிர்வாழ் நீரின வளங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் உயிர்வாழ் நீரின வளங்களின் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

"மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருட்கள்" என்பது உணவுக்காக, மனித நுகர்விற்காக, உடன், குளிரூட்டப்பட்ட அல்லது தகரத்தில் அடைக்கப்பட்ட வடிவத்தில் மீன் இரையாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஏதேனும் மீன் வகை அல்லது மீன் உற்பத்திப் பொருள் மற்றும் பதனிடப்பட்ட அல்லது உயிருடன் உள்ள ஏதேனும் மீன் வகை எனப் பொருள்படும்.

"எச். எஸ் குறியீடு" என்பது இறுப்பனவு பெயரீட்டு முறையின் ஒத்திசைவாக்கப்பட்ட முறைமை (எச். எஸ்) என அறியப்படும் ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பொருள் விபரணம் மற்றும் குறியீடு முறைமை வகுப்பாக்கஞ் செய்த வியாபார உற்பத்திப் பொருட்களிற்கான பெயர்களினதும் இலக்கங்களினதும் சர்வதேச ரீதியான நியமப்படுத்தப்பட்ட முறைமையாகும் எனப் பொருள்படும்.

"சட்டவிரோத ஒழுங்குபடுத்தப்படாத, அறிக்கையிடப்படாத" என்பது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14 (எ) என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட இந்த சமுத்திர ரியுனா ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 17103 தீரமானத்தினால் பந்தி 1 இல் தரப்பட்ட செயற்பாடுகளைக் குறிக்கின்றது.

"செய்முறைப்படுத்தல்" என்பது ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கங்கள் என்னும் விடயத்திற்கு மீன் அல்லது மீன் உற்பத்திப்பொருள் என்பவற்றுக்கான ஏதேனும் பெறுமதி சேர்ப்பு வகை எனப் பொருள்படும்.

"மீள் ஏற்றுமதி" என்பது நாடொன்றினுள் முன்னரே இறக்குமதி செய்யப்பட்டிருந்தால் ஏற்றுமதிப் பொருட்களின் அல்லது பண்டங்களின் செய்முறை எனப் பொருள்படும்.

"பிராந்திய கடற்றொழில் முகாமைக் குழுக்கள்" என்பது கடற்றொழிலைப் பேணிக்காப்பதற்கு, முகாமை செய்வதற்கு மற்றும் அபிவிருத்தி செய்வதற்குள்ள சர்வதேச கடற்றொழில் உடன்படிக்கைக்கான அல்லது ஒழுங்கமைப்பு வேலைக்கான தரப்புகளாக இருக்கின்றதான அரசுகள் அல்லது ஒழுங்கமைப்புகள் மூலமான பொறிமுறை எனப் பொருள்படும்.

"மூன்றாம் திறத்தவரான ஏற்றுமதியாளர்" என்பது வேறு ஆளினால் அல்லது திறத்தவரினால் சொந்தமான அங்கீகரிக்கப்பட்ட தாபனத்தின் மூலம் செய்முறைப்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மீன் அல்லது மீன் உற்பத்திப் பொருட்களின் மீன் ஏற்றுமதி செய்கின்ற ஆளொருவர் அல்லது திறத்தவர் ஒருவர் எனப்பொருள்படும்.

"படகு" என்பது மீன்பிடித் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் அல்லது மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட உட்கருதப்படும் ஏதேனும் படகு, கப்பல் அல்லது வள்ளம் எனப்பொருள்படும்.

"உலக வியாபார ஒழுங்கமைப்பு" என்பது நாடுகளுக்கிடையே வியாபார விதிகளைக் கையாளுகின்ற உலகளாவிய ரீதியிலான சர்வதேச ஒழுங்கமைப்பு எனப்பொருள்படும்.

## அட்டவணை 1

படிவம் 1

**மீன் மற்றும் மீன் உற்பத்திப்பொருட்கள் (உயிரிடை /பதனிடப்பட்டவை) ஏற்றுமதி செய்வதற்கான தாபனம் அல்லது கம்பனியைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பகாரர்களினது /நிறுவனங்களினது முழுப்பெயர்:

2. முகவரி :

3. தொடர்பு இலக்கம் (தொலைபேசி /தொலைநகல் இலக்கம் ) மற்றும் மின் அஞ்சல் :

4. எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பொருட்களின் வகை /மற்றும் பதனிடப்படும் வடிவம் /முறை:

| மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் வகை (இனங்கள்) | இயைபான எச்எஸ் குறியீடு | உற்பத்திப் பொருட்களின் வகை (உண்ணக்கூடிய மீன், அலங்கார மீன், மீனுக்கான இரை) | உற்பத்திப் பொருட்களின் வடிவம். (உயிருள்ளது, பதனிடப்படாதது, பதனிடப்பட்டது, அல்லது வேறு) | உற்பத்திப் பொருட்களின் தன்மை (உயிருள்ளது, பதனிடப்படாதது, பதனிடப்பட்டது, அல்லது வேறு) | ஏற்றுமதி செய்யும் நாடு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

5. கம்பனி/நிறுவன பதிவு இலக்கம் :
   சொத்தாண்மையின் தன்மை :
   பிஐஓ (BIO) இன் முதலீட்டுச் சபையின் பதிவு இலக்கம் (கிடைக்கக்கூடியதாக இருப்பின்):

6. மீன் உற்பத்திப் பொருட்கள் பதனிடுகின்ற /பொதியிடுகின்ற இடத்தின் அமைவிடம் :
7. வருடாந்த மொத்த ஏற்றுமதியளவு:
8. மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் ஒவ்வொரு வகை தொடர்பான முடிவடைந்த உற்பத்திப் பொருட்களுக்கான இலக்கு சந்தை:

9. தொழிலுக்கு அமர்த்தப்பட்ட பணியாட்டொகுதி.

| வகை | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| | |

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையாகவும் சரியானவையாகவும் உள்ளன என நான் /நாங்கள் சான்றுப்படுத்துகின்றேன் /சான்றுப்படுத்துகின்றோம். இதன்கண் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் விபரங்கள் பொய்யானவையாக அல்லது பிழையானவையெனக் கண்டுபிடித்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் உரிமம் வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் நான் உடன்படுகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் .........................     திகதி............................................

**அட்டவணை 1**

படிவம் 2

**மீன் மற்றும் மீன் உற்பத்திப்பொருட்கள் (உயிரிடை /பதனிடப்பட்ட/மீன் இரை) இறக்குமதி செய்வதற்கான தாபனம் அல்லது கம்பனியைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்.**

1. விண்ணப்பகாரர்களினது /நிறுவனங்களினது முழுப்பெயர்:
2. முகவரி :
3. தொடர்பு இலக்கம் (தொலைபேசி /தொலைநகல் இலக்கம் ) மற்றும் மின் அஞ்சல் :
4. இறக்குமதி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பொருட்களின் வகையும் வடிவமும் :

| மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் வகை (இனங்கள்) | இயைபான எச்.எஸ் குறியீடு | உற்பத்திப் பொருட்களின் வகை (உண்ணக்கூடிய மீன், அலங்கார மீன், மீனுக்கான இரை) | உற்பத்திப் பொருட்களின் வடிவம். (உயிருள்ளது, பதனிடப்படாதது, பதனிடப்பட்டது, அல்லது வேறு) | இறக்குமதி செய்யும் நாடு | இறக்குமதி செய்தலின் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

5. வியாபாரப் பதிவு இலக்கம் :
   (பிஜஓ) முதலீட்டுச் சபை பதிவு இலக்கம் (கிடைக்கக்கூடியதாக இருப்பின்):

6. இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களிற்கான களஞ்சியப்படுத்துகின்ற/ பதனிடுகின்ற /பொதியிடுகின்ற இடத்தின் அமைவிடம் :
7. களஞ்சியப்படுத்தல் /பொதியிடுதலின் மொத்த இறக்குமதியளவு:
8. இறக்குமதி தொகையின் வருடாந்த இலக்கு :
9. தொழிலுக்கு அமர்த்தப்பட்ட பணியாட்தொகுதி :

| வகை | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| | |

மேலே கொடுத்துவப்பட்ட விபரங்கள் உண்மையானவையாகவும் சரியானவையாகவும் உள்ளன என நான் /நாங்கள் சான்றுப்படுத்துகின்றேன் /சான்றுப்படுத்துகின்றோம். இதன்கண் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் விபரங்கள் பொய்யானவையாக அல்லது பிழையானவையெனக் கண்டுபிடித்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் உரிமம் வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் நான் உடன்படுகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் ......................... திகதி............................................

**அட்டவணை 1**

படிவம் 3

**மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் (உயிரிடை /பதனிடப்பட்டவை) இறக்குமதி மற்றும், மீன் ஏற்றுமதி செய்வதற்கான தாபனத்தை அல்லது கம்பனியினைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பகாரர்களினது /நிறுவனங்களினது முழுப்பெயர்:

2. முகவரி :

3. தொடர்பு இலக்கம் (தொலைபேசி /தொலைநகல் இலக்கம் ) மற்றும் மின் அஞ்சல் :

4. பதிவின் வகை (அ) முழுமையானது ☐ , (ஆ) மூன்றாம் திறத்தவர் : ☐

5. இறக்குமதி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பொருட்களினக் வகையும் வடிவமும் :

| மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் வகை (இனங்கள்) | இயைபான எச். எஸ் குறியீடு | உற்பத்திப் பொருட்களின் வகை (உண்ணக்கூடிய மீன், அலங்கார மீன், மீனுக்கான இரை) | உற்பத்திப் பொருட்களின் வடிவம். (உயிருள்ளது, பதனிடப்படாதது, பதனிடப்பட்டது, அல்லது வேறு) | இறக்குமதி செய்யும் நாடு | இறக்குமதி செய்தலின் நோக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

6. வியாபார பதிவு இலக்கம் :
   பிஜஓ பதிவு இலக்கம் (கிடைக்கக்கூடியதாக இருப்பின்)
7. இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களிற்கான களஞ்சியப்படுத்துகின்ற/ பதனிடுகின்ற / பொதியிடுகின்ற இடத்தின் அமைவிடம் :
8. களஞ்சியப்படுத்தல் /பொதியிடுதலின் மொத்த இறக்குமதியளவு:
9. இறக்குமதி தொகையின் வருடாந்த இலக்கு :
10. தொழிலுக்கு அமர்த்தப்பட்ட பணியாட்டொகுதி :

| வகை | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| | |

மேலே கொடுத்துவப்பட்ட விபரங்கள் உண்மையானவையாகவும் சரியானவையாகவும் உள்ளன என நான் /நாங்கள் சான்றுப்படுத்துகின்றேன் /சான்றுப்படுத்துகின்றோம். இதன்கண் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் விபரஙபள் பொய்யானவையாக அல்லது பிழையானவையெனக் கண்டுபிடித்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் உரிமம் வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய உரிமம் இரத்துச் செய்யப்படும் எனவும் நான் உடன்படுகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் ......................... திகதி...........................................

## அட்டவணை 2

| இல | முறை | வகை | வருடாந்த பதிவுக் கட்டணம் (ரூபாக்களில்) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வகை - 1 (ஆண்டுக்கு 10,000 Kg க்கு கீழ் | வகை - 2 (ஆண்டுக்கு 10,000 Kg அல்லது அதற்கு மேல்) | வகை - 3 (ஆண்டுக்கு 100,000 அலகுகளுக்கு கீழ்) | வகை - 4 (ஆண்டுக்கு 100,000 அலகுகளுக்கு அல்லது அதற்கு மேல்) |
| 1 | இறக்குமதி மட்டும் | உயிரிடை உணவிற்கான மீன் மட்டும் | 5,000.00 | 10,000.00 | 5,000.00 | 10,000.00 |
| | | சமைக்காத மீன் அல்லது மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் மட்டும் | 10,000.00 | 20,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | மீன்பிடிப்பதற்கான மீன் இரை | 10,000.00 | 20,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | மீன்பிடிப்பதற்கான உயிருடை மீன் இரை | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது | 5,000.00 | 10,000.00 |
| 2 | ஏற்றுமதி மட்டும் | உயிரிடை உணவிற்கான மீன் மட்டும் | 50,000.00 | 100,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | சமைக்காத மீன் அல்லது மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் மட்டும் | 50,000.00 | 100,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | மீன்பிடிப்பதற்கான மீன் இரை | 25,000.00 | 50,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | மீன்பிடிப்பதற்கான உயிருடை மீன் இரை | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது | 25,000.00 | 50,000.00 |
| | | அலங்கார மீன் | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது | 25,000.00 | 50,000.00 |
| 3 | இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி மட்டும் | உயிரிடை உணவிற்கான மீன் மட்டும் | 50,000.00 | 100,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | சமைக்காத மீன் அல்லது மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் மட்டும் | 50,000.00 | 100,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | மீன்பிடிப்பதற்கான மீன் இரை | 25,000.00 | 50,000.00 | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது |
| | | மீன்பிடிப்பதற்கான உயிருடை மீன் இரை | ஏற்புடைய தாகாது | ஏற்புடைய தாகாது | 25,000.00 | 50,000.00 |
| 4 | பிற இறக்குமதியும் ஏற்றுமதியும். | பிற | 10,000.00 | 20,000.00 | 10,000.00 | 20,000.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.